1992 செப்டம்பர் 24]

விவசாயிகள் ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோண்ட முடியும், ஒரு கிணறு பொய்த்துப் போய் விட்டால் 30,000 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது, அதற்கு இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பும் இல்லை. எனவே, இந்த ரெசிஸ்டிவிட்டி மீட்டருக்குப் பதிலாக இன்னும் வேறு ஏதாகிலும் நவீன விஞ்ஞானக் கருவிகள், நம்முடைய நாட்டிலே இல்லாவிட்டாலும் அயல்நாடுகளிலேயாவது கிடைக்குமா என்பதை அரசு ஆராயுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நவீனக்கருவிகள் உலகத்தின் எந்த மூலையிலே இருந்தாலும் அதனைக் கொண்டு வந்து இந்தத் திருநாட்டைப் பொன்னாடாய் ஆக்குவதற்கு எங்களுடைய புரட்சித் தலைவியினுடைய அரசு என்றும் முயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு நிறைய கேள்விகள் வருகின்றன. வினா எண், 77, திரு, கே. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்,

77—

நிலையான கூரை அமைத்தல்.

*9768—திரு. கே. பாலசுப்பிரமணியன்:

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

நகரத்திலுள்ள குடிசைகளுக்கு நிலையாக லைட் ரூப் ஷீட் அல்லது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் (Lite Roof Sheet or Asbestos Sheet) அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

திரு. கே. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி நகரத்தைச் சுற்றியும், அருகாமையிலும் இருக்கும் குடிசை வாழ் மக்களெல்லாம் வசித்து வரும் வேளையிலே அவர்களுக்கு இந்தக் குடிசைகள் பற்றி எரிவதான நிகழ்ச்சிகள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன அப்படி ஏற்படும்பொழுது அரசாங்கம் அவர்களுக்கு நஷ்டயீடாக வீடுகளைப் புதுப்பித்துக் கொள்ளும் வகையிலே பல இலட்ச ரூபாய்களை அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். இப்படி தொடர்ச்சியாக இந்தத் தொகையைக் கொடுத்து வருவதனாலே இருக்கக்கூடிய நஷ்டத்தை அரசாங்கம் தொடர்ந்து செய்து வருகிறது. இதை ஈடு செய்யும் வகையிலே, லைட் ரூஃப் ஷீட் என்ற ஒரு பொருளையோ அல்லது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் என்று சொல்லக்கூடிய ஒரு பொருளையோ உபகரணமாக அவர்களுக்குக் கொடுத்தால் பர்மனென்டாக ஐந்தாண்டுகளுக்கோ அல்லது பத்தாண்டுகளுக்கோ அவர்கள் வசித்து வருவதற்கும், நஷ்டம் ஏற்படாமல், தீயினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக 1971-ஆம் ஆண்டிலே தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் சென்னையிலே ஏற்படுத்தப்பட்டு குடிசை மாற்றும் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தது. 1983-ஆம் ஆண்டிலிருந்து இது சென்னையிலிருந்து விரிவுபடுத்தப்பட்டு சுமார் 112 நகரங்களும் 31 பேரூராட்சிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தத் திட்டங்களெல்லாம் செயல்படுத்தப்பட்டு வந்தன. அந்த அடிப்படையில் குடிசைகள் நெருக்கமாக இருக்கின்ற பகுதிகளுக்கு அடுக்கு மாடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மற்றப் பகுதிகளில் அரசு நிதி உதவியுடனும், ஹட்கோ நிதி உதவியுடனும் உலகவங்கி நிதி உதவியுடனும் குடிசைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இந்தக் குடிசைகள் மேம்படுத்தப்படுகின்ற திட்டத்தில் கடனாக 4,000 ரூபாய் அரசு அளிக்கிறது. அந்த அடிப்படையிலே குடிசைவாழ் மக்கள் தங்களுடைய குடியிருப்புகளுக்கு லைட் ரூஃப் ஷீட் அல்லது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் மற்றும் ஒரு கழிவறை போன்றவற்றைச் செய்து கொள்ளலாம். அந்த நிலையில் தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இந்த லைட் ரூஃப் ஷீட்டோ, ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டோ அரசு மூலமாகவே செய்கின்ற திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

1992 செப்டம்பர் 24]

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் வாழும் குடிசைப் பகுதி மக்கள் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு மூலமாக அடுக்கு மாடிக் கட்டிடங்களை வாங்கி விடுகிறார்கள். அதன் பிறகும் அதன் பக்கத்திலேயே குடிசைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்களிடம் சென்று இதை காலி செய்ய வேண்டுமென்று கேட்டாலும் அல்லது ஸ்லம் கிளியரன்ஸ் போர்டுக்குக் கம்ப்ளெயின்ட் கொடுத்தாலும் சரி, அவர்கள் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். இப்படியே போய்க் கொண்டிருந்தால் எத்தனை அடுக்கு மாடிக் கட்டிடங்கள் நீங்கள் கட்டினாலும் அந்தக் குடிசைகளை மாற்றி அமைக்க முடியாது. ஆகையினால் இதற்கு ஒரு புதிய சட்டத்தை நாம் கொண்டு வர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 78, திரு. செ. பெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

முற்பகல் 10.35

78—

ஏற்காடு தொகுதியில் தொழிற்கல்விக் கூடம்.

9604— திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா,

ஏற்காடு தொகுதியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு தொழிற்கல்விக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏற்காடு தொகுதியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தொழிற்கல்விக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே, ஆயிரம் பேர் கொண்ட கிராமங்களுக்கு ஒரு பேருந்து விடப்படும் என்ற முறையில் **அதிகமானபஸ்கள்** விடப்பட்டிருக்கின்றன. என்னுடைய